# நடப்பு நிகழ்வுகள்- ஜுன் 21 - 2017

- யோகா மனம் மற்றும் உடலுக்கிடையே சமநிலையை அடைவதற்கான ஒரு முழுமையான வழியை வழங்குகிறது என்ற உண்மையை உணர்த்த ஒவ்வொரு ஆண்டும் **ஜுன் 21 அன்று சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.** 2017 மையக்கருத்து “Yoga for Health” ஆகும்.

- உலக நீரளவியல் நாள் (World Hydrography Day) ஜுன் - 21

- ஐ.நா.சபையின் சிறியவர் நிதியம் (UNICEF) 2017 ஜுன் 20 அன்று உலக அகதிகள் நாளில் தனது புதிய **இளைய நல்லெண்ண தூதுவராக சிரிய அகதி முசூன் அல்மெல்லெகான்** (Muzoon Almellehan) **னை நியமித்துள்ளது.** இதன் மூலம் 19 வயது பெண் கல்வி ஆர்வலரான Muzoon அதிகாரப்பூர்வ அகதி எனும் தகுதியுடன் UNICEF-ன் முதல் நல்லெண்ண தூதுவராகிறார்.

- 2045 ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் கார்பன் வெளியீடற்ற நாடாக (net-zero carbon emission emitter) மாறுவதற்கு ஸ்வீடன் நாடு திட்டமிட்டுள்ளது.

- மத்தியபிரதேசத்திலுள்ள 64 சிறு நகரங்களின் நகர்புற சேவைகளை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (Asian Development Bank) $275 மில்லியன் டாலருக்கான கடனொப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.

- ஆவணக்காப்பகதுறையில் ஒத்துழைப்பை ஊக்கப்படுத்துவதற்காக போர்ச்சுக்கல் நாட்டுடனான வரலாற்று உட்படிக்கையில் லிஸ்பனில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இவ்வொத்துழைப்பின் ஒரு பகுதியாக Torre do Tombo (போர்ச்சுக்கலின் தேசிய ஆவணக்காப்பகம்) ‘Moncoes do Reino’ (பருவகால சம்பந்தமாக) 62 தொகுதிகளில் டிஜிட்டல் நகல்களை இந்திய தேசிய ஆவணக்காப்பகத்திற்கு வழங்கியுள்ளது.

- இந்தியாவின் புதிய மத்திய உள்துறை செயலாளராக Rajiv Gauba, நியமிக்கப்பட்டுள்ளார்.

- 2017 BIO சர்வதேச மாநாடு கலிபோர்னியாவின் சான் டியாகோவிலுள்ள சான் டியாகோ மாநாட்டு மைதானத்தில் ஜுன் 19 முதல் 22 வரை நடைபெறுகிறது. இந்தநிகழ்வை Biotechnology Innovation Organization (BIO) நடத்துகிறது. இது உயிரி தொழில்நுட்பத்துறையை பாதிக்கும் முக்கிய போக்குகள் மீது கவனத்தை செலுத்தும் மிகப்பெரிய உலக நிகழ்வாகும். அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சரான YS.சௌத்திரி இந்தியா சார்பில் கலந்துகொள்கிறார்.

- அண்மையில் பஞ்சாப் அரசு அரசுப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொடக்ககல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. ஆங்கில அறிவை வளர்க்கும் வகையில் 2017 ஜுலை முதல் அனைத்து அரசுப்பள்ளிகளிலும் சிறப்புத்திட்டம் கொண்டுவரப்படும். மேலும் 13000 அரசுப்பள்ளிகளிலும் 48 அரசு கல்லூரிகளிலும் இலவச இணைய சேவை செய்யப்படும் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 33% லிருந்து 50% ஆக அதிகரித்துள்ளது.

- எரிபொருள் சம்மந்தமான சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கான சிறந்த தொழில்நுட்பங்களை கண்டுவருவதற்காக EcoCycle Corporation –ன் தலைமை அதிகாரியும் இந்திய விவசாய நுண்ணுயிரியலாருமான Dr. Shrihari Chandraghatgi –க்கு 2017க்கான ஜப்பான் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விருது வழங்கப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY